செ.வெ.எண்: 600 நாள்: 17.10.2011

# செய்தி வெளியீடு

காவேரி நதிநீர் பங்கீடு குறித்த காவேரி நடுவர் மன்றத்தின் உத்தரவு குறித்து தமிழக அரசால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனு நாளை (18.10.2011) விசாரணைக்கு வர இருப்பதால், இந்த இடைக்கால மனு மற்றும் சிறப்பு விடுப்பு மனுவில் தமிழக அரசு எடுக்க வேண்டிய நிலைப்பாடு குறித்து விவாதிப்பதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையில் இன்று (17.10.2011) தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறை அரசுச் செயலாளர், நீர்வள ஆதாரங்களுக்கான தமிழக அரசின் ஆலோசகர் திரு ஏ. மோகனகிருஷ்ணன், காவேரி தொழில்நுட்பக் குழுமத்தின் தலைவர் திரு ஆர். சுப்பிரமணியன், தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் திரு ஏ. நவநீதகிருஷ்ணன், உச்ச நீதிமன்றத்தில் உள்ள தமிழக அரசின் கூடுதல் தலைமை வழக்குரைஞர் திரு எஸ். குரு கிருஷ்ணகுமார், உச்ச நீதிமன்ற மூத்த வழக்குரைஞர் திரு சி. எஸ். வைத்தியநாதன் மற்றும் வழக்குரைஞர் திரு ஜி. உமாபதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள் : 17.10.2011